**இந்தியத் துணைத் தூதரகம்**
யாழ்ப்பாணம்

ஊடக அறிக்கை

<u>பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் அவர்களின் மன்னார் மற்றும் யாழ்ப்பாண விஜயம்</u>

பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் அவர்கள் டிசம்பர் 7-8, 2020 தேதிகளில் மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டார். இந்த விஜயத்தின் போது மன்னார் மடுவில் யாத்ரீகர்களுக்காக 144 தங்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான இந்திய திட்டத்தின் கட்டுமானத்தின் முன்னேற்றத்தையும், வரலாற்று சிறப்பு மிக்க திருக்கீதேஸ்வரம் கோயில் மேம்பாட்டு பணியையும் அவர் ஆய்வு செய்தார். மன்னார் மடு தேவாலயத்தில் தங்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகஸ்ட் 2020-இல் கையெழுத்தானது. இது, செப்டம்பர் 2021-க்குள் இலங்கை ரூபாய் 290 மில்லியன் செலவில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருகீதேஸ்வரம் கோயிலில், இந்திய அரசு இலங்கை ரூபாய் 320 மில்லியனுக்கும் அதிகமான செலவில் மகாமண்டபம் மற்றும் பிற பணிகளை புதுப்பித்து முடித்துள்ளது. இந்த இரண்டு திட்டங்களும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்ச்சியான மற்றும் மிகவும் வெற்றிகரமான வளர்ச்சி, ஒத்துழைப்பு மற்றும் கூட்டுறவின் ஒரு முக்கிய பகுதியாகும்.

2. டிசம்பர் 7 ம் தேதி, பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் மன்னாரின் ஆயர் டாக்டர் இம்மானுவேல் பெர்னாண்டோவை சந்தித்து மன்னார் பிராந்தியத்தில் வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்புக்கான சாத்தியங்கள் குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார். அடுத்த நாள் (8 டிசம்பர் 2020), மன்னாரில் தம்பபவானியில் 100 மெகாவாட் காற்றாலை மின் திட்டத்தின் பிரமாண்ட திறப்பு விழாவில் பங்கேற்றார். இந்திய நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் பங்கேற்பதை உள்ளடக்கிய இந்த திட்டம் மன்னாரில் முதன்முதலாக பிரதமர் மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டது.

நிகழ்வின் புகைபடங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

09 டிசம்பர் 2020
யாழ்ப்பாணம்

***